யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015


| தரம் :- 13 (2015) | சித்திரக்கலை - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள்

- ❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ❖ பகுதி I - எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
  - ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- பகுதி II - மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
  - ஒரு உப பகுதியிலிருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.
- ❖ பகுதி I, பகுதி II ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.


### பகுதி I

➢ **வினா இல** *01 - 05* **வரை கீழே தரப்பட்டுள்ள A, B, C, D, E ஆகிய நிழற்படங்களோடு தொடர்புபட்ட வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**


A


B


C


D


E

*01)* A என்ற எழுத்தினால் காட்டப்படும் பாரதத்தின் சாராநாத் குருகுலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அதி சிறந்த புத்தர் சிலையினால்,
1) குப்தர் காலத்திற்குரிய மரபு ரீதியான பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
2) புத்த பகவான் மிகதாயில் முதலாவது தர்ம உபதேசத்தினைச் செய்த சந்தர்ப்பம் வெளிப்படுத்தப்படுகின்றது.
3) புத்தபகவானின் முப்பத்திரண்டு விசேட பண்புகள் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன.
4) சாராநாத் குருகுலத்தில் உருவான புத்தர் சிலைகளின் பொதுப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன.
5) புத்தபெருமானது சுயபுலனடக்கத்தை (துஸ்தரன் சிகிரியாவை) வெளிப்படுத்தப்படுகின்றது.

(..........)

*02)* B என்ற எழுத்தில் நாகரிகத்திற்குரிய சில
1) அமர்ணா காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மார்பளவுப் பெண்சிலைத் தொகுதிகளுள் ஒன்றாகும்
2) எகிப்திய பாரம்பரிய கலைப் பண்புகளை வெளிப்படுத்தும் அமர்ணாவில் நிர்மாணிக்கப்பட்ட மார்பளவுச் சிலையாகும்
3) கீசாயியில் இருந்து அமர்ணாவுக்குக் கொண்டுவரப்பட்ட பெண் ஒருவரின் மார்பளவுச் சிலையாகும்
4) இயற்கை பரிமாணத்துடன் அமர்ணாவில் நிர்மாணிக்கப்பட்ட வசீகரமான அரசி ஒருவரின் மார்பளவுச் சிலையாகும்.
5) அமர்ணா காலத்து வெண்கல சிலையாகும் (..........)

03) C என்ற எழுத்தினால் காட்டப்படும் ஹென்றிமூவரின் ‘அரச குடும்பம்’ என்ற சிலை,
1) இயற்கையானதும் யதார்த்தமானதுமான வடிவங்கள் சமநிலையில் பயன்படுத்தித் தொகுக்கப்பட்ட சோடிச் சிலையாகும்
2) கலைஞர் தனக்கே உரித்தான வடிவங்களைப் பயன்படுத்தி செய்த அரூப வடிவங்களின் நிர்மாணிப்பாகும்
3) மனித பரிமாணங்களை உருத்திரிபு செய்து நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்
4) இயற்கையான வடிவங்கள் தாவரவியல் சிலை ஒன்றுக்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு சந்தர்ப்பமாகும்
5) மறுமலர்ச்சிக்கால சிற்புப் பண்புகளை கொண்ட பிரமாண்டமான சிற்பமாகும் (..........)

04) D என்ற எழுத்தினால் குறித்துக் காட்டப்படும் சிற்பத்தின் பகுதி யாது?
1) மாமல்லபுர சிறந்தவெளிப் பாறைச் சிற்பங்களின் பகுதியாகும்
2) மாமல்லபுர கடற்கரை கோயிலில் காணப்படும் சிற்பத்தின் பகுதியாகும்
3) மாமல்லபுர மகிராசரா வர்த்தினி கோயிலில் காணப்படும் சிற்பத்தின் பகுதியாகும்
4) மாமல்லபுர வைகுந்த பெருமான் கோயிலில் காணப்படும் சிற்பத்தின் பகுதியாகும்
5) காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணப்படும் சிற்பத்தின் பகுதியாகும் (..........)

05) E என்ற சிற்பம் 43 வது குழு உறுப்பினரின் படைப்பாகும். அக்கலைஞர்
1) தரணியாகல 2) பீலிங் 3) மஞ்சுசிரி
4) ஐவன்பீரிஸ் 5) ரிச்சட்கப்ரியல் (..........)

06) இசுருமுனியின் இயற்கைக் கற்பாறையில் செதுக்கி உள்ள யானைகள் நீரில் விளையாடும் விதத்தைக் காட்டும் செதுக்கலில்
1) சோழ கலைப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன
2) குப்த கலைப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன
3) பல்லவர் கலைப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன
4) பாண்டியர் கலைப் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன
5) விஜயநகர நாயக்கர் பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன (..........)

07) ‘மரக் கூட்டம்’ என்னும் கருப் பொருளிலல் கொலாஜ் ஓவியங்களை நிர்மாணிக்கும் போது
1) மரங்களின் வடிவங்களை இரேகைகளினால் வரைந்து அதன் மீது வர்ணக் கடதாசிகளை ஒட்டுதல் வேண்டும்
2) மரங்களின் இயற்கை வடிவம் வர்ணங்களுக்கு ஏற்ப கடதாசிகளைத் தெரிவு செய்து ஒட்டுதல் வேண்டும்
3) மரங்களின் வடிவத்தைத் தனித்தனியாக வெட்டி முழுத்தளத்திலும் ஒட்டுதல் வேண்டும்
4) மரங்களின் வடிவங்களினதும் நிறங்களினதும் கோலங்கள் வெளிப்படும் வண்ணம் எளிய வடிவங்களைச் சுதந்திரமாக வெட்டி ஒட்டுதல் வேண்டும்
5) பல்வேறு பழைய சஞ்சிகையில் காணப்படும் மரங்களின் வடிவங்களை சேகரித்து வெட்டி ஒட்டுதல் வேண்டும் (..........)

08) சந்திரவட்டக்கல் சிற்பம் இலங்கையின் கலை நிர்மாணிப்புகளுள் பெறுமதி வாய்ந்த ஒரு நிர்மாணிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்குக் காரணம்
1) வழிபாட்டுத் தலம் ஒன்றினுள் நுழைகின்ற வாயிலில் அமைந்துள்ளமை ஆகும்.
2) உள்நாட்டுக் கலைஞரின் பேராற்றலை எடுத்துக்காட்டும் பெறுமதி வாய்ந்த நிர்மாணிப்பு என்பதனால் ஆகும்
3) லௌகீகப் பிணைப்புக்களிலிருந்து விடுபடுதலை வெளிப்படுத்துவதற்காக நிர்மானிக்கப் பட்டுள்ளமை ஆகும்
4) கருங்கல் ஊடகத்தினால் சிறுபுடைப்பு நுட்பத்தில் வெளிப்பட்டுத் தெரியும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் ஆகும்
5) காலத்திற்கு காலம் அவை மாற்றம் பெற்றுச் சென்றுள்ளமை ஆகும் (..........)

09) அபயகிரி தூபி வரலாற்று ரீதியாக முக்கியத்தும் பெறக் காரணம்
   1) அனுராதபுரக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பிரமாண்டமான மூன்று தூபிகளுள் ஒன்றாகக் காணப்படுகின்றமை ஆகும்
   2) எட்டு வழிபாட்டுத் தலங்களுக்குரிய (அட்டமஸ்த்தான) தூபிகளுள் பெரிய தூபி என்பதனால் ஆகும்
   3) 'கிரி' என்ற சமணத்துறவியின் (கிரி நிகண்டயா) ஆராமை இருந்த இடத்தில் வலகம்பா மன்னனால் கட்டப்பட்மையினால் ஆகும்
   4) நுழைவாயிலில் சங்கநிதி, பதுமநிதி பைரவ உருவங்கள் அமையப் பெற்றுள்ளமையினால் ஆகும்
   5) இந்தியாவில் அமராவதி தூபி சாயலில் கட்டப்பட்டமையாகும் (..........)

10) வர்ண பேதங்கள் என்பதனால் குறிக்கப்படும் வர்ணங்கள்
   1) ஒரு வர்ணத்துடன் கருமையான வர்ணத்தைச் சேர்த்து உண்டாக்கப்படும் இருண்ட வர்ணங்கள்
   2) அடிப்படை வர்ணங்களையும் துணை வர்ணங்களையும் சேர்த்து உண்டாக்கபடும் வர்ணங்கள்
   3) ஒரு வர்ணத்தின் பிரகாச இயல்பிலிருந்து இருண்ட இயல்பு வரையுள்ள சந்தர்ப்பங்கள்
   4) ஒரு வர்ணத்திற்கு உகந்த இயல்பைச் சேர்ப்பதன் மூலம் உண்டாக்கப்படும் இள வர்ணங்கள்
   5) ஒரு வர்ணத்தின் வெப்ப, குளிர்வர்ண சாயல் (..........)

➢ **வினா இலக்கம் *11 - 15* வரை கீழே தரப்படும் F, G, H, I, J என்ற நிழற்படங்கள் தொடர்பான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் இடுக.**


F


G


H


I


J

11) கண்டிய சுவரோவிய மரபில் இருந்து சற்று வேறுபட்ட தன்மையிலான சித்திரங்களை காட்டும் ஓவியப் பகுதி
   1) F    2) G    3) H
   4) I    5) J    (........)

12) இராஜ கீர்த்தியை புலப்படுத்தும் முகமாக நிர்மாணிக்கப்பட்ட படைப்பு
   1) G    2) F    3) I
   4) H    5) J    (........)

13) குப்தர் காலத்து படைப்புக்களில் பகுதியாக கருதக்கூடிய படைப்பு
   1) J    2) I    3) H
   4) G    5) F    (........)

14) வெண்கல ஊடகத்தில் ஆக்கப்பட்ட படைப்பு
   1) I    2) H    3) G
   4) F    5) J    (........)

15) வரலாற்றுக்கு முற்பட்ட கால படைப்புக்களில் ஒன்றாகக் கருதப்படக் கூடியது.
   1) H    2) I    3) J
   4) F    5) G    (........)

16) சிகிரிய ஓவியங்கள் பிரெஸ்கோ புவனோ எனப் பெயரிடப்பட்டது
1) இவ் ஓவியங்கள் நீடித்திருக்கும் காரணத்தினால்
2) சாந்துக் கலவையின் மீது ஓவியங்கள் வரையப்பட்டுள்ளமையால்
3) நிறங்களும் ரேகைகளும் சாந்துக் கலவைக்குள் உறிஞ்சப்பட்டிருப்பதாகக் கருதப்படுவதால்
4) கலாநிதி செனரத் பரணவிதான இவ்வாறு கூறியிருப்பதனால்
5) 4ம், 5ம் நூற்றாண்டில் வரையப்பட்டுள்ளமையினால் (..........)

17) அனுராதபுர அவுக்கண புத்தர்சிலை ஆக்கத்தில்
1) காந்தார கலை மரபு செல்வாக்குச் செலுத்தியுள்ளது
2) அமராவதி கலை மரபு செல்வாக்குச் செலுத்தியுள்ளது
3) குப்தர் கலை மரபு செல்வாக்குச் செலுத்தியுள்ளது
4) மதுரா கலை மரபு செல்வாக்குச் செலுத்தியுள்ளது
5) பல்லவ கலை மரபு செல்வாக்குச் செலுத்தியுள்ளது (..........)

18) கண்டிக் கால ஓவியக்கலை மலைநாடு, தமிழ்நாடு என வேறுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் தாழ்நாட்டு ஓவியங்கள் காணக்கூடிய இரு இடங்கள்
1) தம்புல்ல லென் விகாரையும், ரிதி விகாரையும்
2) கதலுவ விகாரையும், மதவல விகாரையும்
3) கதலுவ விகாரையும், தெல்வத்த விகாரையும்
4) கரகம்பிட்டிய விகாரையும், ரிதி விகாரையும்
5) தெகல்தொறுவ விகாரையும், தலதாமாளிகையும் (..........)

19) இலங்கை வெளிநாட்டு ஆதிக்கத்தின் கீழிருந்த வேளையில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்த லித்தோ அச்சு ஓவியங்களை வெளியிட்டவர்
1) சோலியஸ் மென்டிஸ் 2) மஞ்சு ஸ்ரீ 3) ஜோர்ச் கீற்
4) எம் சார்லிஸ் 5) சோமபத்து வித்யாபதி (..........)

20) நீர் வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தும் ஓவியத்தில் இருக்க வேண்டிய சிறப்பான பண்பு
1) தளம் முழுவதும் நிறம் சமநிலையில் பரவப்பட்டிருத்தல்
2) நீருடன் கலக்கப்பட்ட நிறம் தூரிகை அடிப்பு இருப்பது போல தடித்த நிறப் பிரயோகம்
3) ஊடுகாட்டும் முறையிலான நிறங்கள் நீருடன் கலக்கப்பட்டிருக்கும் விதத்தைப் பிரதிபலித்தல்
4) வெள்ளை நிறம் பயன்படுத்தப்படுவதால் நிறங்களின் வன்மை, மென்மை காட்டப்பட்டிருத்தல்
5) மூலவர்ணங்களில் தடயங்கள் தெளிவாக தெரிதல் (..........)

21) நடனக் கலையில் மதிப்புமிக்க நடனமான கோலாட்ட நடனத்தைச் சித்திரிக்கும் பெறுமதிமிக்க செதுக்கல் காணப்படுவது
1) கடலாதெனிய விகாரையின் அடித்தளத்தில்
2) யாப்பகுவ கற்சுவரில்
3) எம்பக்க தேவாலய மரச்செதுக்கலில்
4) இலங்காதிலக விகாரையின் வெளிப்புறச் சுவரின் மணியுருக்கட்டு (பொரதம்) நிரைகளுக்கிடையில்
5) பொலநறுவை வைஜந்தி மாளிகை அடித்தளத்தில் (..........)

22) பாறையை வெட்டி பிளந்து முழுமையாக வெளிப்படுத்தப்பட்ட எல்லோராவில் காணப்படும் வழிபாட்டு இடம்
1) தீன்தாள் குகை 2) தோதாள் குகை
3) கைலாசநாதர் கோயில் 4) துர்மலேனா கோயில்
5) இந்திரசபா கோயில் (..........)

23) போஸ்ரர் சித்திரம் ஒன்றில் இருக்கவேண்டி முக்கிய பண்பானது
1) தகவலின் பிழையற்ற தன்மையும் வேகமும்
2) வர்ணங்களின் பொருத்தப்பாடு
3) குறியீட்டு தன்மையான உருவங்கள்
4) கருமையான தட்டையான வர்ணப் பிரயோகம்
5) உருவமும், வெளியும் சமநிலையாக பயன்படுத்தப்பட்டு உள்ளமை (..........)

24) பொலன்னறுவைப் புத்தர் சிலைகளில் காணக்கூடிய விசேட இயல்பு
1) நெளிவரி மடிப்புகள்
2) நீரலை மடிப்புகள்
3) சோடியான இரேகை மடிப்புகள்
4) மடிப்புகளின்மை
5) வரிவடிவ மடிப்புக்கள் (..........)

25) கண்டி யுகத்திற்குரிய தெகல்தொருவ விகாரையில் உள்ள யமனை வெற்றி கொள்ளல் எனப் பெயர் பெறும் ஓவியத்தின் விசேட அம்சம்
1) பூமித்தாயின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
2) யமனின் புத்திரர்கள் உருவம் காட்டப்பட்டிருத்தல்
3) வாளைக் கையில் கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
4) துப்பாக்கியை கையில் கொண்ட யமனின் உருவம் காட்டப்பட்டிருத்தல்
5) ஐந்து தலையுடன் யமன் காட்டப்பட்டிருத்தல் (..........)

26) 19 ஆம் நூற்றாண்டில் இறுதியில் பிரபல்யம் பெற்ற பாணிக்கமைய இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது. இது வெளிப்படுத்தும் பாணி




1) இம்பிரிசம்
2) போஸ்ட் இம்பிரிசம்
3) கியூபிசம்
4) போவிசம்
5) சர்ரிலிசம் (..........)

27) இச் சிலைமனை விமர்சகர்களின் சிறந்த பாராட்டுக்குரியதாய் அமைவது



1) இந்துசமய கட்டடக்கலை நுட்பத்துக்கமைய நிர்மாணிக்கப் பட்டுள்ளமையினால் ஆகும்
2) கோள வடிவ சிகர அமைப்பில் (கிங்ஜிகாவசத முறைப்படி) கூரை அமைக்கப்பட்டிருப்பதனால் ஆகும்
3) பொலனறுவைக் காலத்தின் பல சித்திரக்கலை ஆக்கங்கள் கிடைக்கப்பெறும் கலைக்கூடம் என்பதனால் ஆகும்
4) பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்ட விகாரை என்பதனால் ஆகும்
5) முழுமையும் செங்கல், சுதை கொண்டு கட்டப்பட்டமையினால் ஆகும் (..........)

28) கி. பி. 4 ஆம் நூற்றாண்டில் மகாசேன மன்னனால் கட்டுவிக்கப்பட்ட இவ் அமர்ந்து இருக்கும் சிலை



1) அனுராதபுர காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒரேயொரு இருந்த நிலை புத்தர் சிலையாகும்
2) அபயகிரி விகாரைச் சூழலில் காணப்படும் சமாதி புத்தர் சிலையாகும்
3) கொழும்பு நூதனசாலையில் காணக்கூடிய தொழுவில புத்தர் சிலையாகும்
4) அனுராதபுர புனித பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பன்குலிய புத்தர் சிலையாகும்
5) சஸ்சேறுவ கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ள சிலையாகும்

(..........)

29) பேராசிரியர் பரணவிதான அவர்களின் கருத்துப்படி இவ் ஓவியங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவது



1) பிதுரங்கல விகாரைக்கு பூசை செய்யச் செல்லும் அரசனின் மனைவிமாராவர்
2) காசியப்ப மன்னனின் அந்தப்புர மனைவிமாராவர்
3) காசியப்ப மன்னனின் மகள்மாரான போதி, உத்பலவன்னா ஆகியோராவர்
4) மின்சாரம் என்னும் பெண்களும் முகில்கள் என்னும் பெண்களுமாவர்
5) நீரில் விளையாடும் பெண்களாவர் (..........)

30) சிஸ்டைன் இறை பீடத்தின் பலிபீடத்துக்குப் பின்னாலுள்ள சுவரில் வரையப் பெற்ற விசேடமான இப்பிரெஸ்கோ சித்திரத்தின் மூலம்



1) இறுதித் தீர்ப்பு சித்தரிக்கப்படுகின்றது
2) உலக தோற்றம் பற்றிய கதை சித்தரிக்கப்படுகின்றது
3) இறுதி இராப்போசனம் சித்தரிக்கப்படுகின்றது
4) ஆதாம் படைக்கப்பட்டமை சித்தரிக்கப்படுகின்றது
5) ஆதாமின் உலக வாழ்க்கை சித்தரிக்கப்படுகின்றது (..........)

31) பின்வருவனவற்றுள் எதனைப் பயன்படுத்தி சிந்துவெளி நாகரிகத்தைச் சேர்ந்த நடனக்காரன் வடிவமைக்கப்பட்டுள்ளது?

1) கருங்கல் 2) மரமும் கருங்கல்லும் 3) செம்மணற்கல்
4) செங்கல் 5) சாம்பல் நிறக்கல் (..........)

32) மனித உருவத்தைப் படைப்பதில் கிரேக்க சிற்பிகளின் பிரதான கருத்தாக இருந்தது

1) முகத்தின் பக்கப்பார்வையையும் கண்களின் முன்பக்கத் தோற்றத்தையும் காண்பித்தல்
2) பலத்தையும் வெற்றியையும் வெளிப்படுத்தல்
3) திரிபடைந்த வடிவங்களைப் பயன்படுத்துதல்
4) இலட்சியமான மனிதர் - அழகினையும் தேகபலத்தையும் காணப்பித்தல்
5) கைகளைப் பொத்தியவாறு விறைப்பான தன்மையுடையதாகக் காண்பித்தல் (..........)

33) எகிப்திய ஓவியத்தின் ஒரு முனைப்பான சிறப்பியல்பு

1) தூரதரிசன தத்துவங்களை அனுசரித்தல்
2) முப்பரிமான பாங்கில் நிழற்றுதல்
3) கோடுகள்சார் வரைவிலக்கணம்
4) ஒருங்கமைவைப் புறக்கணித்தல்
5) நேராக பார்த்த விதத்தில் முக அமைப்பைக் காட்டுதல் (..........)

34) இலங்கையின் புராதன அரச மரத்தைச் சுற்றிய மண்டப (போதிகா) ங்களுள் இதுவரை காலமும் பேணிப் பாதுகாக்கப்பட்ட அமைப்பைக் கொண்டிருப்பது

1) நில்லக்கம 2) மகாமேவ வனம் 3) யாப்பகூவா
4) சிகிரி உத்தியானம் 5) களனி மகாபோதி (..........)

35) சாஞ்சி தூபியின் (ஹர்மிகா' இற்குப் பதிலாக இலங்கைத் தூபிகளில் சேர்க்கப்பட்ட அமைப்பு

1) பேசாவளலு 2) கொத்ஹறல்லா 3) சதுரக்கோட்டம்
4) தேவகோட்டம் 5) கர்பய (அண்டம்) (..........)

➢ **36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படத்தைத் தொடர்புபடுத்தி கேட்கப்படும் வினாக்களிற்குரிய பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் இடுக.**



36) இச் சித்திரத்தின் மூலம் கலைஞர் வெளிப்படுத்த முற்பட்ட விடயம்
1) ஓய்வெடுப்போர் 2) மட்பாண்டம் செய்வோர்
3) ஐஸ்பழம் விற்போர் 4) வண்டியில் பயணிப்போர்
5) சிந்தனையும் ஓய்வும் (..........)

37) இச்சித்திரத்தின் படைப்பாளி
1) 43 வது குழுவில் ஓவியர் ஜவன்பீரிஸ்
2) 43 வது குழுவில் ஓவியர் பீலிங்
3) 43 வது குழுவில் ஓவியர் தரணியாகல
4) 43 வது குழுவில் ஓவியர் ஹரிப்பீரில்
5) 43 வது குழுவில் ஓவியர் மஞ்சுசிரி (..........)

38) இக் கலைஞர் எத்துறை சார்ந்த கலைப்பணியாற்றியவராக கருதப்படுகிறார்?
1) புகைப்படக் கலை 2) காட்டுன் சித்திரம் 3) சிற்பம்
4) ஓவியம் 5) சித்திரக் கல்வி (..........)

39) இச்சித்திரத்தில் காணப்படும் மனித உருவங்கள்
1) யதார்த்த தன்மையாக உயிரோட்டமிக்கதாக காணப்படல்
2) யதார்த்த தன்மையாகவும் உயிரோட்டமற்றதாகவும் காணப்படல்
3) றோமாண்டிக் வாதமுறையில் காட்டப்பட்டிருத்தல்
4) கனவடிவ வாதமுறையில் காட்டப்பட்டிருத்தல்
5) கனவடிவ வாத பண்புகளையும் தமக்கேயுரிய பண்புகளையும் கலந்து காட்டியிருத்தல்
(..........)

40) இச்சித்திரம் பூர்த்தியாக்கப்பட்டுள்ள ஊடகம்
1) பஸ்ரல் வர்ணம் 2) எண்ணெய் வர்ணம் 3) நீர் வர்ணம்
4) தூள் வர்ணம் 5) இயற்கை வர்ணம்

## பகுதி II

### உப பகுதி 'அ'

### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

01) கொழும்பு களனி விகாரையில் காணப்படும் ஓவியங்கள் கண்டிய காலத்திலும் அதற்கு பிற்பட்ட கொழும்புக் காலத்திலும் வரையப்பட்டவை.

(i) இங்கு காணப்படும் பழைய, புதிய ஓவியங்களை வரைந்த ஓவியர்கள் யாவர்?

(ii) இங்கு காணப்படும் கண்டிய ஓவியங்களின் பண்புகளை அறிமுகம் செய்க.

(iii) இங்கு காணப்படும் புதிய ஓவியங்களுக்கும் கொழும்பு இசுபத்ராமய விகாரை புதிய ஓவியங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

02) ஈசுருமுனிய விகாரை காலத்தில் வேறுபட்ட பல கலைப் பெறுமதியான படைப்புகளைக் கொண்டுள்ளது.

(i) ஈசுருமுனிய பாதையில் காணப்படும் இரு சிற்பங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(ii) மேற்படி சிற்பங்களில் காணப்படும் பல்லவ கலைப்பண்புகளை அறிமுகம் செய்க.

(iii) றம்மசு பூங்காவில் இருந்து பெறப்பட்ட சிற்பத்தில் கலைஞர் கருத்தை வெளிப்படுத்த முற்பட்ட விதத்தினை விளக்குக.

### உப பகுதி 'ஆ'

### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

03) புராதன இந்தியாவின் சிற்ப ஓவிய செதுக்கல் திறனை எடுத்துக்காட்டுவதாக அஜந்தா குகைகள் அமைகின்றன.

(i) அஜந்தா ஓவியங்களின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ii) அஜந்தா குகைகளின் வாஸ்து முறையை பற்றி அறிமுகம் செய்க.

(iii) "அஜந்தாவில் 17 வது குகையில் சிறப்பான பல விடயங்கள் ஓவியமாக்கப்பட்டுள்ளது" இக்கூற்றினை விமர்சிக்குக.

04) மொகலாய கலையும் இராஜபுத்தானியக் கலையும் சமகாலத்தில் வளர்ச்சி பெற்றதாயினும் தமக்குள் அவை வேறுபட்டவையாகும்.

(i) மொகலாய சித்திர கலைக்கு அக்பர் மன்னன் ஆற்றிய பணிகள் 4 தருக.

(ii) "இராஜ மாளிகை" சித்திரங்கள் என்ற விடயம் தொடர்பாக அறிமுகம் செய்க.

(iii) மொகலாய சித்திரங்களையும் இராஜபுத்தானிய சித்திரங்களையும் அதன் பண்பு / பாணி, விடயப் பொருள் போன்றவற்றின் அடிப்படையில் ஒப்பிட்டு விமர்சனம் ஒன்று முன் வைக்குக.

### உப பகுதி 'இ'

### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

05) 19 ஆம் நூற்நாண்டில் இறுதியில் சுதந்திர சித்திரக் கலைஞர்களால் பல்வேறு ஓவியப் பாணிகள் அறிமுகம் செய்யப்பட்டது.

(i) ஒளியியல் வாத கலைஞர்கள் நால்வரின் பெயரினைத் தருக.

(ii) அகவலய யதார்த்த வாத (சர்ரிலிசம்) ஓவியங்களின் பண்பினை உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக.

(iii) "ஜக்சன் பொலக்' என்ற ஓவியரின் படைப்புகளில் காணப்படும் அரூப ஓவியவாதப் பண்புகளை மதிப்பிடுக.

06) உரோமானிய வீழ்ச்சியை தொடர்ந்து எழுச்சி பெற்ற பைசாந்திய கலை வேலைப்பாடுகள் உரோமர் கலையிலும் வேறுபட்டு காணப்பட்டது.

(i) உரோமானிய சிலைகள் நான்கு தருக.

(ii) மொசாய்க் சித்திரத்தின் அடிப்படை அம்சங்கள், அவை உருவாக்கப்படும் நுட்பமுறை என்பன பற்றி அறிமுகம் செய்க.

(iii) சன்விட்டாலே ஆலயத்தில் காணப்படும் சிறப்பு வாய்ந்த ஓவியத்தை மதிப்பீடு செய்க.